14th August 1963]

*152 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any suggestion has been received from the Union Government for introducing control measures for ensuring equitable distribution of cement;

(*b*) whether those suggestions have been acted upon; and

(*c*) whether a copy of the rules governing the distribution of cement will be placed on the table of the House?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) to (*c*) : With reference to the suggestion of the Government of India, this Government have introduced permit system of distribution of cement. The question of issuing cement control order under the Industries (Development and Regulation) Act, 1951 is under consideration. A copy of the order will be placed on the Table of the House when finalised.

திரு. வி. எஸ். மணி : சார், சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் வேலை தாலூகா ஆபீசில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தாலூகா ஆபீஸ் வேலை பாதிக்கப்படுகின்ற காரணத்தால் சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் வேலையைக் கவனிப்பதற்காகத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்து சரியாகக் கண்காணிக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்போது சிமெண்ட் பர்மிட் கொடுக்கும் பொறுப்பை தாலூகா காரியாலயங்களில் கொடுத்திருப்பதற்கு காரணமே ஸ்தலத்தில் இருக்கக் கூடிய பொதுமக்கள் சிமெண்ட் வேண்டுமென்று கேட்கும்போது அதை நன்றாக ஆராய்ந்து உண்மையிலேயே தேவையா என்று தெரிந்து கொடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான். இதற்கு விசேஷ அதிகாரி போட்டால் இன்னும் அதிகச் சிக்கல் ஏற்படும் என்பது அரசாங்கத்தின் கருத்து.

*153 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Works be pleased to state the quantity of cement required by Madras Government as additional allotment during 1962 and the actual additional allocation made?

THE HON. SRI V. RAMAIAH : The additional allotment sought for by this Government during 1962 was 50,000 tonnes and the allotment made was 24,000 tonnes.

திரு. கே. ஏ. மதியழகன் : நாம் கேட்டதற்குப் பாதிதான் கிடைத்திருக்கிறது. இதற்குக் காரணம் அவர்களுக்கு நம் மீது இருக்கிற அசிரத்தையா அல்லது அவர்களால் கொடுக்க முடியாத நிலைமையா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நமக்குக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் தீவிரமாக நினைக்கக் கூடிய காரணத்தால்தான் நெருக்கடி இருக்கும்போது கூட நாம் கேட்ட அளவுக்குக் கொடுக்காவிட்டாலும் கணிசமான பங்கைக் கொடுத்திருக்கிறார்கள்.

[14th August 1963

திரு. கே. ஏ. மதியழகன்: நம்முடைய அபிவிருத்தி திட்டங்களின் வேலைகளுக்கு, குறிப்பாக பரம்பிக்குளம் ஆளியாறு போன்ற அணைக்கட்டு வேலைகளுக்காக மத்திய சர்க்காரிடமிருந்து அதிகமான சிமெண்டைப் பெறுவதற்காக நம்முடைய மந்திரிசபை கமிட்டி நியமித்தார்கள். அது அமைக்கப்பட்டு ரொம்ப நாள் ஆயிற்று. அந்த கமிட்டி வற்புறுத்தி எவ்வளவு சிமெண்ட் பெற்றிருக்கிறார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் கூறக்கூடிய கமிட்டிக்கும், சிமெண்ட் கொடுப்பதற்கும் சம்பந்தமே இல்லை. பரம்பிக்குளம்—ஆளியாறு போன்ற முக்கிய திட்டங்களுக்கான சிமெண்டையெல்லாம் மத்திய கோட்டாவில் இருந்து மத்திய அரசாங்கமே கொடுத்து விடுகிறார்கள். ஆகவே, இவற்றுக்கு வேண்டிய சிமெண்டை நம்முடைய அரசாங்கம் முயற்சி எடுத்து வாங்க வேண்டிய அவசியமில்லை.

* 154 *Q.*—SRI K. A. **MATHIALAGAN:** Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the requirement of cement and the allotment made in the year 1962 to Madras State;

(*b*) whether the allotment for 1962 has been received in full; and

(*c*) if not, what is the gap and the reasons for the gap?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) The requirements sent to the Government of India under State quota in the year 1962 was 13,74, 374 tonnes and the allotment made was 5,35,200 tonnes.

(*b*) No.

(*c*) There was a gap of 1,12,364 tonnes in the despatch of cement by the cement factories. This was due to short supply by the factories and also due to supplies made to Defence, Railways, Power and Irrigation Projects on priority basis.

திரு. கே. ஏ. மதியழகன்: நமக்காக ஒதுக்கப்பட்ட சிமிண்டுக்கும் கேட்கப்பட்ட சிமிண்டுக்கும் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கிறதே, அது ஏன்?

கனம் திரு. வெ. ராமைய்யா: போதுமான சிமிண்டு நாட்டில் இல்லாததுதான்.

* **155 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்டங்களில் சிமிட்டி யார் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது?

(இ) பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மூலம் விநியோகம் செய்ய அனுமதி தர உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Distribution of cement in the districts is being made by the Collectors, Tahsildars, Deputy Tahsildars of sub-taluks and the Headquarters Deputy Tahsildars of taluks.